**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 - 2022**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 3348-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சான தற்போதைய நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேறான தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 29,642.60 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 228.02 மில்லியனானதுடன் அதில் ரூபா 15,990 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 123 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்ட அதேநேரம் ரூபா 650 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5 மில்லியன் ஆசிய அபிவிருத்தி நிதியத்தின் விசேட நிதி வளங்களால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், ரூபா 7,742.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 59.56 மில்லியன் ஐரோப்பிய முதலீட்டு வங்கியால் (ஈஐபீ) நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 5,259.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40.46 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயத்தில், ரூபா 7,231.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 55.63 மில்லியன் தொகை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 22,410.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 172.39 மில்லியன் கொழும்பு மாநகர சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களைக் கொண்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 ஆனது அதன் நடவடிக்கைகளை 2016 நவம்பர் 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. பின்னர் நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் காலப்பகுதி 2023 யூலை 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2:1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 03 இன் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| **கணக்கீட்டுக் குறைபாடுகள்.'. கணக்காய்வு விடயம்** | **பெறுமதி ரூபா மில்லியன்** | **முகாமைத்துவத் தின் பதில்கள்** | **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் ஐஊடீ 02 பிரதான ஒப்பந்தக்காரர்களுடன் தொடர்புடைய ஐ.அ.டொ 457,711.69 ஆன செலுத்த வேண்டிய மிகுதி தக்கவைப்புத் தொகையானது இறுதி விகிதத்தைப் பயன்படுத்தி மறுமதிப்பீடு செய்யப்படவில்லை. எனவே, செலுத்த வேண்டிய இறுதித் தக்கவைப்பு மீதி குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | 156 | உடன்படுகின்றேன். இவ்வருடத்தில்-2023 சீராக்கம் மேற்கொள்ளப்படும். | செலுத்த வேண்டிய தக்கவைப்பின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| **இல** | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாண இலக்கம் 502(2) | செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து நிலையான சொத்துகளின் நாளதுவரையாக்கப் பட்ட விபரங்கள் உட்பட நிலையான சொத்துப் பதிவேடொன்று செயற்திட்டத்தினால் பராமரிக்கப்பட வில்லை | அனைத்து சொத்துக்களும் தற்காலிகமாக ீஆரு இல் வைக்கப்பட்டுள்ளதுடன் அந்த சொத்துக்கள் அவ்வப்போது தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்டு வருவதால், செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவில் நாம் இருப்பு பதிவை பராமரிக்கிறோம். | ீஆரு ஆல் பயன்படுத்தப்படுகின்ற நிலையான சொத்துகளின் பதிவுகளை வைத்திருப்பதற்கு நிலையான சொத்துகள் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாண இலக்கம் 128(1)உ, இலக்கம் 507, இலக்கம் 756 | வருடாந்தப் பொருட் கணக்கெடுப்பு வருடாந்தர நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் முடிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2023 ஏப்ரல் 10 வரை அது மேற்கொள்ளப்பட வில்லை. | ஒவ்வொரு ஆண்டும், பொருட் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படு கின்றது. அதற்கான ஆவணம் விரைவில் அனுப்பி வைக்கப்படும். | விதிகள் மற்றும் பிரமாணங்களுட ன இணங்கி நடப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல்

### 3.1 பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

செயற்திட்டத்தின் செயற்பாடுகளானது 03 கூறுகளை கொண்டுள்ளதுடன், இம்மூன்று கூறுகளின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 4,940 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 38 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில், செயற்திட்டம் 01 மற்றும் செயற்திட்டம் 02 இற்கான நிதி இடைவெளியை நிரப்புவதற்கான மேலதிக நிதியளிப்பிற்காக ரூபா 4,550 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 35 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட அபிவிருத்தி உதவிப் பணிகளிற்காக ரூபா 390 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 3 மில்லியன் மிகுதி தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஐ.அ.டொலர் 38 மில்லியனில் 65.40 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 6,088.54 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 24.85 மில்லியன் (தற்போதுள்ள நாணயமாற்று விகிதத்தின் படி) மாத்திரமே செயற்திட்டம் தொடங்கப்பட்ட திகதியிலிருந்து 6 ஆண்டுகள் கடந்திருந்த பின்னரும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 3.2 செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துதல், பூர்த்தி செய்தலில் தாமதங்கள் மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட செயற்திட்ட நிதிகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| இந்த அறிக்கையின் பந்தி 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி திட்டத்தின் குறைந்த செயல்திறன் காரணமாக, நிதி வழங்குவதில் கணிசமானளவு தாமதங்கள் காட்டப்பட்டமையால் அந்த தாமதத்தின் காரணமாக ரூபா 54.5 மில்லியன் கடன் வழங்கும் நிறுவனத்தால் கடப்பாட்டுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டிருந்தது. மேலும், கடன் நீட்டிக்கப்பட்ட திகதிக்கு முன்னதாக மொத்த கடன் பெறுமதியில் 34.6 சதவீதத்திற்குச் சமமான ஐ.அ.டொலர் 13.15 மில்லியன் ஆன கடனைப் பயன்படுத்துவதற்கான சாத்தியத்தன்மையானது செயற்திட்டத்தின் மெதுவான நகரல் காரணமாக சந்தேகத்திற்கிடமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் அனைத்து பணிகளும் திருப்திகரமாக முடிக்கப்பட்டுள்ளன. பூர்த்தி செய்ததற்கான அறிக்கை மற்றும் இறுதி பட்டியல் இரண்டும் முறையாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள துடன் பணம் செலுத்துவதற்கான சான்றிதழ்கள் (ஜீஊஎ) கொடுப்பனவுகளுக் காகத் தயார் படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், கட்டளை மாறுபாடு மற்றும் நோக்க மாற்றங்களின் | பணிகளை விரைவாக முடிப்பதற்கும் நிலுவை பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காரணமாக ஒப்பந்தத் தொகையானது ஒப்பந்தத் தொகையில் 15மூ ஐ விட அதிகமாக இருப்பதால், ளுஊயீஊ இன் அங்கீகாரமின்றி கொடுப்பனவுகள் செலுத்தப்பட முடியாது. | |

**3.3 செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட பொறியியலாளர் ஒருவர் ரூபா 180,000 மாதாந்த சம்பளத்திற்கு செயற்திட்டத்தினால் ஆட்சேர்பபு செய்யப்பட்டிருந்த போதிலும் மற்றொரு வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டத்தின் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக அவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் இச்செயற்திட்டத்தின் நிதியைப் பயன்படுத்தி 15 மாத காலப்பகுதிக்கான சம்பளமாக ரூபா 2.71 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளதுடன் இப்பணத்தை மீளப்பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் கீழ் பணியமர்த்தப்பட்ட சிரேஷ்ட பொறியாளர் நீர் சுத்திகரிப்பு, ழுருஆ நடவடிக்கைகள் மற்றும் சேறு முகாமைத்துவம் ஆகியவற்றில் அனுபவம் பெற்றவர். எனவே, ழுருஆ மற்றும் சேறு நிர்வாகத்தில் உள்ள செயற்திட்ட ஊழியர்களுக்கு தனது அறிவையும் ஆலோசனையையும் பகிர்ந்து கொள்வதற்காக புஊறுறுஆஜஜீ மற்றும் பிற திட்டங்களுக்கு அவர் நியமிக்கப்பட்டார். | செயற்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட சேவைகளுக்காக மட்டுமே சம்பளம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான ஒப்பந்தம் விசேட ஆலோசகர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட நிதியைப் பயன்படுத்தி அந்த நோக்கத்திற்காக ரூபா 1.32 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவகளை மேற்கொள்வதற்கு தேவையான அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | செயற்திட்ட நிதியானது எப்போதும் செயற்திட்ட வரம்பிற்குள் உள்ள செயற்பாடுகளுக்கு செயற்திட்ட முகாமைத்துவத் தினால் பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| 2010 யூலை 26 ஆம் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது குறித்துக் கொள்ளப்பட்டதுடன் உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு தேவையான நடவடிக்கைக்காக அறிவிக்கப்பட்டுள்ளது. | உள்ளக கணக்காய்வை ஒழுங்காக செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |